# மெட்ரிக்ஸ் நிறுவனத்தின் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்




(துர்க்கா)

சிரம்பான், டிச.17- நாட்டின் பிரபல மெட்ரிக்ஸ் வீடமைப்பு மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் கொண்டாட்ட நிகழ்ச்சியில் பல்லின மக்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

சிரம்பான். பண்டார் ஸ்ரீ செண்டாயான் மண்டபத்தில் கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு அந்நிறுவன தலைமை அதிகாரி சாய் கெங் வாய் தலைமையில் டிசம்பர் 9 ஆம் தேதி தொடங்கி வரும் 24 ஆம் தேதி வரை பல்வேறு கேளிக்கை நிகழ்ச்சிகள் கண்கவர் வாணவேடிக்கையுடன் நடைபெற்று வருகிறது.

இந்நிகழ்ச்சியின் தொடக்க விழாவில் 4 முதல் 12 வயதிற்கு உட்பட 100 ஆதரவற்ற குழந்தைகளுக்கு கிறிஸ்துமஸ் அன்பளிப்பு பொருட்கள் வழங்கப்பட்டன. மேலும் ஆதரவற்ற குழந்தைகளை பராமரிக்கும் 3 இயக்கங்களுக்கு தலா 3,000 வெள்ளி நிதி உதவியும் வழங்கப்பட்டது.

அர்த்தமுள்ள வகையில் சமூக சேவையாற்ற வேண்டும் என்பதற்காக மெட்ரிக்ஸ் நிறுவனம் ஆண்டுதோறும் கிறிஸ்துமஸ், தீபாவளி, சீனப் புத்தாண்டு, நோன்புப் பெருநாள் ஆகிய அனைத்து பண்டிகைகளின் போதும் இதுபோன்ற நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து வருகிறது.



கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தில் சிறுவர்களுடன் மெட்ரிக்ஸ் குழுமத்தினர், நிதியுதவி பெற்ற சமூக இயக்கங்கள்